பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தரமானதே சிறந்தது என்றால்



சொலிட்

பம்பையே வாங்குங்கள்

# உதயன்

விலை ரூ2/50

When only The best is Good Enough



Buy Solide Pumps

சுடர்: 4 சுக்கில ஆடி மீ 16 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 துல்ஹஜ் பிறை 27 (31 - 07 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 203

# இருதரப்பு பேச்சுக்களின் உச்சக்கட்டம் இன்று!

## முக்கிய முடிவுகள் வெளியாகலாம்

புதுடில்லி, ஜூலை 31

இலங்கை — இந்திய பிரதிநிதிகள் குழுக்களிடையே புதுடில்லியில் தொடர்ந்து நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள், இன்று உச்சக்கட்ட நிலையை அடையும் என புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்றைய பேச்சுக்களின் முடிவில் இணக்கமான சில தீர்மானங்கள் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப் படுவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வெள்ளிக்கிழமை இரு தரப்பினராலும் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையை மேலெழுந்த வாரியாக ஆராய்வதாக முதல் நாள் (சனிக்கிழமை) நடந்த பேச்சுக்கள் அமைந்தன.

முதல் நாள் பேச்சுக்களின் போது இந்திய வெளியுறவு அமைச்சர் பி. வி. நரசிம்மராவ் அமைதிப்படை கட்டம் கட்டமாக விலகுவதற்கும், அதிகாரப் பரவலாக்கலுக்கும் உள்ள தொடர்பு பற்றி விரிவாக எடுத்துச் சொன்னார்.

அமைதிப்படை இலங்கையில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்றால் அதற்கு அந்த நாட்டு ஜனாதிபதியின் சம்மதம் தேவை என்ற நிலைப்பாட்டை இலங்கைக் குழு முதல் நாள் பேச்சுக்களின் போது வலியுறுத்தியது.

### நேற்று

நேற்றைய (ஞாயிறு) பேச்சுக்கள் அமைதிப்படை வில

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ரஞ்சன் - பந்த் பேச்சு

புதுடில்லி, ஜூலை 31

இலங்கை வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின நேற்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் கே. சி. பந்த்தைச் சந்தித்து சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் வரை பேச்சுக்கள நடத்தினர்.

அமைதிப்படையை விலக்குவது சம்பந்தமான கால அட்டவணை தயாரிப்பது, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் சகல இன மக்களுக்கும் பாதுகாப்பு வழங்க இலங்கை அரசால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்— ஆகியன குறித்து இப் பேச்சுக்கள் அமைந்தன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவுடன் பேச்சு

கொழும்பு, ஜூலை 31

பிரதமர் ராஜீவ் காந்தியை இலங்கை அமைச்சர்கள் விஜேரத்தின, சாகுல் ஹமீது ஆகியோர் இன்று (திங்கள்) சந்தித்துப் பேசுவர் என்று இலங்கை வானொலி நேற்று அறிவித்தது. (உ-எ)

## மாகாண பொலீஸாக மக்கள் தொண்டர் படை

கொழும்பு, ஜூலை 31

மக்கள் தொண்டர் படையை வடக்கு-கிழக்கு மாகாணப் பொலீஸ் பிரிவாக உபயோகிக்கவும் இலங்கை அரசு தயாராக இருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இதனை இலங்கை வானொலி நேற்று தெரிவித்தது.

ஒவ்வொரு பொலீஸ் நிலையத்திலும் நூறு வீரர்கள் என்ற அடிப்படையில் அவர்கள் நிலைகொண்டிருப்பார்கள்.

அப்பகுதிகளில் வாழும் சகல சமூகத்தினரின் பாதுகாப்பையும் பந்தோபஸ்தையும் நிச்சயிக்கும் விதத்தில் தேவையானபோது இராணுவ உதவியும் அளிக்கப்படும் என்று இலங்கை வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (உ.எ)

## இரு தரப்பிற்கும் வெற்றி!

புதுடில்லி, ஜூலை 31

புதுடில்லியில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் இரு தரப்பினருக்கும் வெற்றி அளிக்கும் வகையில் அமைந்துள்ளன.

புதுடில்லியில் இருந்து வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின நேற்று இதனைத் தெரிவித்தார்.

## ராஜீவுக்கு பிரேமா செய்தி

ஜனாதிபதி பிரேமதாசாவிடமிருந்து வழக்கமான செய்தி ஒன்று பிரதமர் ராஜீவ் காந்தியிடம் ஒப்படைக்கப்பட்டது.

இத் தகவலை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின புதுடில்லியில் தெரிவித்தார். (உ-எ)

## கூட்டறிக்கை மூலமே பத்திரிகைகளுக்குத் தகவல்

புதுடில்லி, ஜூலை 31

புதுடில்லிப் பேச்சுக்கள் குறித்து பத்திரிகைகளுக்கு கூட்டறிக்கை அடிப்படையில தகவல்கள் வெளியிட இரு தரப்பினரும் உடன்பட்டுள்ளனர்.

இத்தகவலை இலங்கை வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின புதுடில்லியில் தெரிவித்தார்.

இந்தியப் பத்திரிகையில் இப்பேச்சுக்கள் குறித்து வெளியிடும் செய்திகள் வெறும் ஊகங்களே என்றும் அமைச்சர் சொன்னார். (உ-எ)

**சுபநேரம்**

31—07—1989

ஆடி 16 — திங்கட்கிழமை

நக்ஷத்திரம்: புனர்பூசம்

சுபத்ரம்:

12.03 முதல் 01.33 வரை

சாகுனம்:

07.33 முதல் 09.03 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## முச்சந்தி முரளி



அப்ப பின்னை பிள்ளையள் பாடு கொண்டாட்டம் தான் எண்டு சொல்லுங்கோ......!

**நாளைய சிறப்பிதழ்**

இலங்கை வங்கியின் பொன் விழாவை ஒட்டி ஆறு பக்கச் சிறப்பிதழ் ஒன்று; நாளைய உதயனுடன் வெளியாகிறது.

வர்த்தகத்துறை மாணவருக்கும், வாடிக்கையாளர்களுக்கும் பயன்தரும் பல கட்டுரைகளுடன் வெளியாகும் அந்தச் சிறப்பிதழைத் தவறாதுவாங்கிப்படியுங்கள்!

## முத்தரப்புப் பேச்சுக்கு முதல்வர் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 31

புதுடில்லியில் நடைபெறும் அதிகாரப் பகிர்வு பற்றிய பேச்சுக்களில் தமிழர் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளக் கூடிய முத்தரப்பாக அமைய வேண்டும் என்று வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் தெரிவித்தார்.

இது குறித்து இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்குக் கடிதம் எழுதப்போவதாக திரு. வரதராஜப்பெருமாள் திருகோணமலையில் இந்தியச் செய்தியாளர்கள் மத்தியில் கடந்த சனிக்கிழமை பேசுகையில் தெரிவித்தார்.

அதிகாரப் பரவலாக்கல் பற்றிய பேச்சுக்களில் தமிழர் பிரதிநிதிகளும்கலந்துகொள்ள தேவையான ஒழுங்குகள் செய்ய வேண்டும் என்று பிரதமர் காந்தியைக் கோருவதாக அக்கடிதம் இருக்கும் என்றும் திரு. வரதராஜப் பெருமாள் சொன்னார். (உ-எ)

# அதிகாரம் வழங்கப்பட்ட பின்பே அமைதிப்படை வெளியேற வேண்டும்

## தமிழ் தேசிய சபை அறிக்கை

திருகோணமலை, ஜூலை 31

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ்பேசும் மக்களுக்குத் தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட்டபின்னரே இந்திய அமைதிகாக்கும்படை இலங்கையிலிருந்து வெளியேறவேண்டும். அதற்கு முன் வெளியேறுவதை ஆதரிக்கவோ அனுமதிக்கவோ முடியாது.

தமிழ்த் தேசிய சபையின் உயர் ஆணைகள் சபையின் இணைப்பொதுச் செயலாளர்கள் திரு. ஞானசேகரம் [ஈ. என். டி. எல். எவ்.] திரு. க. பத்மநாபா, ஈ. பி. ஆர். எல். எவ்.) திரு. அ. செல்வம் (ரெலோ) ஆகியோர் சார்பில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசியசபை என்ற தலைப்பில் விடுக்கப்பட்டுள்ள இந்த அறிக்கை விபரம் வருமாறு:—

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்பிரகாரம் ஸ்ரீலங்கா அரசு அதன் கடமைப்பாடுகளை இன்னும் நிறைவேற்றாத நிலையில், இந்திய அமைதிப் படை வெளியேற ஆரம்பித்ததை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது:

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ்பேசும் மக்களின் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திட்டு இரண்டு வருடங்களாகியும் இன்றுவரை உறுதிப்படுத்தப்பட விலலை. இந்நிலையில் அமைதிப்படை வெளியேற ஆரம்பித்திருப்பது எதிர்காலத்தில் தமிழ் பேசும் மக்கள் முற்றிலும் பாதுகாப்பற்ற நிலைமைக்குத் தள்ளப்படுவதன் ஆரம்பமாகவே

(6 ஆம் பக்கம் பார்க்க)

## டியூட்டறி பற்றி இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

தனியார் கல்வி நிறுவனங்களில் வகுப்புகளை ஆரம்பிப்பது குறித்து அவசரப்பொதுக் கூட்டம் ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள பொண்ட் கல்வி நிறுவனத்தில் இன்று காலை 10 மணிக்கு இக்கூட்டம் ஆரம்பமாகின்றது. (இ-10)

## 'பரா' குண்டு வெளிச்சத்துடன் தாக்குதல்கள்

வல்வெட்டித்துறை, ஜூலை 31

பருத்தித்துறை புலோலி முகாம்களில் இரவு நேரத்தில் பரா வெளிச்சக் குண்டுகள் ஏவப்படுகின்றன. அத்துடன் துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்படுகின்றன.

இதேநேரம் நேற்று முன்தினம் பருத்தித்துறை முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. இதனால் பருத்தித்துறை பண்ணைக்கட்டை ஓடக்கரை, காமராஜா வீதி ஆகிய பகுதிகளிலுள்ள வீடுகள் சேதமடைந்தன. (ஒ 160)

## பெண் ஒருவர் சூடுபட்டு காயம்

வல்வெட்டித்துறை, ஜூலை 31

பருத்தித்துறை, கல்லூரி வீதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் பெண் ஒருவர் காயமடைந்தார்.

ரதிகலா ரவீந்திரதாஸ் (வயது 29) மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ( -160)

## பஸ்சேவை நேற்று 3 மணி வரை

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்-மாவட்டத்தில இலங்கை போக்குவரத்துச் சபையின் உள்ளூர் பஸ் சேவைகள் நேற்று பகல் மூன்று மணி வரையுமே நடைபெற்றன.

ஊரடங்கு அறிவிப்பே இதற்குக் காரணம் ஆகும்.

அதேசமயம் பருத்தித்துறை பஸ் டிப்போவின் பஸ் சேவைகள் நேற்றும் நடைபெறவில்லை.

முல்லைத்தீவு, வவுனியாப் பகுதிகளுக்கான பஸ் சேவைகள் நேற்று நடைபெற்றன. தனியார் மினிபஸ் சேவைகளும் வழமைபோல் நடைபெற்றன. (இ-3-10)

## கொழும்பு பஸ் சேவை மீண்டும்

யாழ்ப்பாணம், ஜூலை 31

தென இலங்கை நிலைமை காரணமாக கடந்த சில நாட்களாக தடைப்பட்டிருந்த யாழ்—கொழும்பு தனியார் பஸ்சேவைகள மீண்டும் இன்று ஆரம்பிக்க உள்ளன.

அதேசமயம் கொழும்பு லொறிச்சேவையும் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. (-3)

## அரிசி மிளகாய்த்தூள் விலை உயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்ப்பாணத்தில் அரிசி, மிளகாய்த்தூள் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன.

மின்சாரம் இல்லாததால் ஆலைகள் டீசல் இயந்திரம் மூலம் இயங்குவதே இதற்குக் காரணம்.

சில ஆலைகள் மின்சாரம் வழங்கப்படும் நேரம் மட்டுமே இயங்குகின்றன. (இ-10)

# நாளை பாடசாலைகள் திறக்கப்படமாட்டா!

கொழும்பு, ஜூலை 31

அரச பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிப்பது ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சு நேற்று அறிவித்தது.

நாளை முதலாம் திகதி சகல பாடசாலைகளும் மீண்டும் ஆரம்பமாகும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

மீண்டும் ஆரம்பமாகும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று அமைச்சு மேலும் அறிவித்தது. (ஒ-எ)

## தெற்கில் அனேக பகுதிகளில் நேற்று மயான அமைதி

யாழ்ப்பாணம், ஜூலை 31

தென் பகுதி ஜே. வி. பி. யினர் விடுத்த ஊரடங்கு அறிவிப்பினால் நேற்று பெரும்பாலான பகுதிகள் வெறிச்சோடிக்காணப்பட்டன அப்பகுதிகளில் மயான அமைதி நிலவியது.

ஆயினும் கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வழமை நிலை காணப்பட்டதாகவும் கூறப்பட்டது.

அனுராதபுரத்துக்கும் புத்தளத்துக்கும் இடைப்பட்ட பகுதிகளில் வாகனப் போக்குவரத்துகளோ சன நடமாட்டமோ காணப்படவில்லை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தூரில் ஷெல் தாக்குதல்

புத்தூரில் நேற்று மாலை இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ஷெல் தாக்குதலில் சிலர் காயமடைந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இச் சம்பவத்தை அடுத்து இப் பகுதி மக்கள் அச்சுவேலி, ஆவரங்கால் பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்த வண்ணம் இருந்தனர்.

போக்குவரத்துக்கள் யாவும் வயாவிளான் ஊடாக மேற்கொள்ளப்பட்டன,

மேலதிக விவரங்கள் தெரிய வரவில்லை. (ஒ-160)

## வடமராட்சியில் நேற்று தாக்குதல் சம்பவங்கள்

வல்வெட்டித்துறை, ஜூலை 31

வடமராட்சியில் நேற்று பரவலாக தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

கலிகை முகாம்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அதை அடுத்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன இதனால் மக்கள் இடம் பெயர்ந்தனர்.

நெல்லியடி மேற்குப் பகுதியில் கிரனேட் வீச்சு சம்பவம் ஒன்று இடம்பெற்றது இதனை அடுத்து பதில் தாக்குதல் நடத்தப்பட்டதால் போக்குவரத்துக்கள் யாவும் மாலிசந்தி, வதிரிச்சந்தி ஊடாக நடைபெற்றன:

மாலை 5 மணியளவில் மண்டானிலும் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. அதை அடுத்து ஷெல் தாக்குதலும் நடந்தது. (ஒ-160)

## சாவகச்சேரி துர்க்கையம்மன் தேர் இன்று

சாவகச்சேரி, ஜூலை 31

சாவகச்சேரி, நுணாவில் மேற்கு விளைவேலி அருள்மிகு ஸ்ரீ துர்க்கையம்பாள் ஆலய தேர்த் திருவிழா இன்று வெகு விமரிசையாக நடைபெறுகின்றது.

புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேரில் துர்க்கை அம்மன பவனி வருவார்,

(உள்ளே சிறப்பு மலர்)

(ெ)

## மீண்டும் ஊரடங்கு

கொழும்பு, ஜூலை 31

நாடு முழுவதும் நேற்று மாலை 4 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் இன்று அதிகாலை 5 மணிக்கு நீக்கப்படும் என்றும் —

மாலை 6 மணிக்கு மீண்டும் அமுலுக்கு வரும் என்றும் அரசு அறிவித்தது. (ஒ-எ)

## மாவையில் பஞ்சரத உற்சவம்

காங்கேசன்துறை, ஜூலை 31

சரித்திரசித்தி வாய்ந்த மாவை முருகன் தேவஸ்தானத்தில் இன்று திங்கட்கிழமை பஞ்சரத உற்சவம் நடைபெறுகிறது.

அதிகாலையிலிருந்து விசேஷ அபிஷேக ஆராதனைகள இடம்பெற்று பிள்ளையார் சிவன், முருகன், ஆறுமுக சுவாமி, சண்டேஸ்வரர் ஆகிய பஞ்சமூர்த்திகள் பஞ்சரதங்களில் ஏறி வீதியுலா வருவார்கள்.

பஞ்சரத உற்சவத்தை அடுத்து இன்று பிற்பகல் 4 மணிக்கு மூர்த்திகள் கீரிமலை சமுத்திர தீர்த்தக் கரைக்கு எழுந்தருளுவார்கள்.

அங்கு செவ்வாய்க்கிழமை ஆடி அமாவாசை தீர்த்த உற்சவம் சிறப்பாக நிகழ்ந்து அன்று மாலை மூர்த்திகள் ஆலயத்துக்கு எழுந்தருளுவார்கள். (இ-68)

(உள்ளே சிறப்பிதழ்)

**இளைய தலைமுறையின் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

மின்தறி மெக்கானிக் (ஆண்) மின்தறி நெசவாளர் (பெண்கள்) கைத்தறி நெசவாளர் (பெண்கள்) இத்தொழில்களில் ஒன்றில் குறைந்தது 03 (மூன்று) வருட அனுபவம் உள்ளவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு உடன் தொடர்பு கொள்ளவும். முகாமையாளர் மின்தறி நெசவு நிலையம் மயிலங்கூடல், இளவாலை. (1334)

### மணமகன் தேவை

சைவ போசன யாழ்ப்பாண இந்து வேளாளர் 31 வயது பெண்ணுக்கு Professional வங்கியாளர் பட்டதாரி மணமகன் தேவை. மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (11650)

### விற்பனைக்கு

மறுசீரமைக்கப்பட்ட நல்ல நிலையில் உள்ள Austin 'A30' கார் விற்பனைக்கு உண்டு; றஜீவ் ஸ்ருடியோ 44, அந்தோனியார் வீதி. பாசையூர். (1338)

V. M. S. R. Hen Farm புறொயிலர் பேட்டுக் கோழிகள் விருத்துக் குஞ்சுகள் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். ஒரு நாள் புறொயிலர் குஞ்சுகள் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகளை பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். No. 36, பலாலி றோட், கந்தர் மடம், இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம். (11617)

National G 1 (Genlock) வீடியோ கமரா விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. பாரத் வீடியோ சென்ரர், 51/1, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (11622)

வேலம்பிராயில் மனை விற்கக் கூடிய பத்து ஏக்கர் நிலம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு; க. சிதம்பரநாதர் கைதடி மேற்கு, கைதடி. (1333)

### மாதிரி வினாக்கள்

க. பொ. த. சாதாரண தரத்திற்குரிய பலமாதிரி வினாக்கள் அடங்கியதும் 1988 டிசம்பர் வினாக்களும் விடைகளும் கொண்ட கணிதப்புத்தகம் பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் ஸ்வாதீஸ் கண்டிக்குளியிலும் விற்பனையாகின்றன. ஆசிரியர் T. நவநீதன் இங்கு Pessonal Classes நடைபெறுகின்றன. 57, செட்டித் தெரு, நல்லூர். யாழ்ப்பாணம். (11652)

### தவறிவிட்டது

சுதிரன் வாசி கைதடி வாசியின் அடையாள அட்டை தவறிவிட்டது. கிடைத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (11655)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் பேட்டுக்கோழி சேவல் விருத்துக் குஞ்சு சூப் குஞ்சு விற்பனைக்குண்டு. சுத்தம செய்து கொடுக்கப்படும். பெண்டம்கோழி முட்டை, வான்கோழி முட்டை விற்பனைக்குண்டு. V. K. S. பாம், 12, கனகசபை ஒழுங்கை, சிவலிங்கப்புளியடி, யாழ். இந்துக்கல்லூரி பின்பக்கம், யாழ்ப்பாணம். (11615)

### கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

(Dekalb) பிறவுண் பேடு சேவல் (Cobb) புறொயிலர் குஞ்சுகள் (02 - 08 - 89) புதன்கிழமை விநியோகிக்கப்படும். (சேவல் குஞ்சு 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை ரூபா 3/50) உடன் பதிவும். இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) குறிப்பு:- இரவில் குஞ்சுகளுக்கு லைட் அவசியமில்லை. (1326)

### றேனியோ

றேனியோ தட்டச்சு மற்றும் சகல அச்சு வேலைகளும் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொள்ள: தயா அச்சகம், 138 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (மனோகரா சந்தி) (சி/2359

### கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக்குஞ்சுகள். சேவற் குஞ்சுகள் 2 ஆம் திகதி புதன்கிழமையும் Hy bro புறொயிலர் குஞ்சுகள் 3 ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க, சற்குணராஜா & பிறதர்ஸ், பிரப்படி லேன், கொக்குவில். (1327)

### Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொள்ளவும். நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3034)

### அளவையியல் II

ஆசிரியர் கேசவன் எழுதிய 1989 ஆம் ஆண்டு ஆவணிப் பரீட்சைக்குரிய அளவையியல் வினா-விடைக் களஞ்சியம் பகுதி II. யாழ்நகர் பிரபல புத்தக நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம் விலை ரூ. 30/ (1325)

## மோதல்


கடந்த வெள்ளிக்கிழமை நண்பகலுக்குப் பின்னர் நவாலியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் சிலர் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கார் ஒன்றில் வந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்த மோதல் சம்பவத்தை அடுத்து நவாலிப் பகுதியில் பதற்றம் நிலவியது. (உ-10)


# டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




Grant BJK&E PFL 1157

'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள்.
அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

Pfizer

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



## செல்வன் சிந்துஷன் (சிந்து)

நாவாந்துறையைச் சேர்ந்த சந்திரசேகர் வதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சிந்தஷன் (சிந்து) தனது முதலாவது பிறந்தநாளை இன்று திங்கட்கிழமை தனது தாத்தாவின் இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை பப்பா, மம்மி, அம்மம்மா, தாத்தா, அப்பப்பா, அப்பம்மா, சுரேஸ் அங்கிள், கீதா அன்டா, ராதா அன்டா, ஐதா அன்டா, பெரியப்பாமார், சித்தப்பா, அத்தை, மாமா, அண்ணா, அக்காமார், மச்சாள்மார், மச்சான், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பலலாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். (1407)

இரத மேறிவரும் மாவை முருகன்
எமது இன்னல் களைய
★ பிரார்த்திக்கின்றோம்! ★

வீரத் திருவிழிப் பார்வையும் - வெற்றி
வேலும் மயிலும் என் முன்னின்றே - எந்த
நேரத்திலும் எனைக் காக்குமே!

## திரிசூலன் அரிசி ஆலை,
திரிசூலன் எண்ணெய் ஆலை
பிரதான வீதி, மாவிட்டபுரம்.

## கே. ஆறுமுகம்
கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பளை.
(மார்க்கெட் அருகில்)

- லங்கா சீமெந்து மொத்த சில்லறை வியாபாரி
- பிறிமா கோழித்தீன், மாட்டுத்தீன் முகவர்
- பல சரக்கு வியாபாரம். (மா)

# விக்னு டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றேட்.

89ஆம் ஆண்டுக்கான Day Classes வழமையான நேர அட்டவணையின் படி நடைபெறும்.

Sat, Sun பிரிவுகள் I, II,
31-07-89இல் இருந்து

| நேரம்: | | நேரம்: | |
|---|---|---|---|
| 7 - 8 | அரசியல் | 11 - 12 | கணக்கியல் |
| 8 - 9 | தமிழ் | 12 - 1 | பொருளியல் |
| 10 - 11 | அளவையியல் | 1 - 2 | இந்து நாகரிகம் |

(சி./3114)

# 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்
31- 07- 1989



## செல்வன் நாகராசா தெய்வேந்திரன்
(யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதியாண்டு மாணவன், முன்னாள் தலைவர் சென் அன்ரனீஸ் ச. ச. நிலையம் ஊர்காவற்றுறை)

மலர்வு: 02- 10- 1962
மறைவு: 03- 05- 1989

நாட்களோ தொண்ணூறு! நாழிகை கழிந்தாலும் அணையாதது உன் அன்பு விளக்கு- பாரிடமெங்கும் கலையாதது எங்கள் சிறந்தவனின் புகழ் விளக்கு பெற்ற தாய் தந்தையரை பிரிந்து சென்றதெங்கே தவிக்கும் தம்பிகள் தங்கைகளையும் நீர் தரணியிலே வந்து பாரையா.
கடைசியிலே கண்ணீர் சிந்த வைத்தாய்—இப்போ கல்வியெனும் கண்ணீரால் பூமாலை சாத்துகின்றோம்.
31-07-89 திங்கட்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் சகலரையும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
உனது பிரிவால துயருறும்
ஐயா, அம்மா, தம்பிகள், தங்கைகள்
உறவினர்கள்.

(1285)

# ஓராண்டு நிறைவினிலே ஓராயிரம் நினைவலைகள்



## ● செல்வி ஜெயந்தி ஜெயரட்ணம் ●
(உடுவில் மகளிர் கல்லூரி, உயர்தர வகுப்பு மாணவி)

மலர்வு: 20 - 10- 1969
உதிர்வு: 31- 07- 1988

மரணம் என்பது இயற்கை தான்- ஆனால்
உன் மரணம்! வேரோடு போரிடவந்த காற்று
பூக்களையும் பறித்து சென்றது போல் அல்லவா?
,,நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்
பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே
நீங்களும் இருக்கும் படி நான் மறுபடியும் வந்து
உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன்''
யோவான் 14 : 13

-குடும்பத்தினர்

இராமலிங்கம் றோட்'
உடுவில். (1286)

# இன்று ஆரம்பம்
## 25, 000 ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான விசேட பயிற்சி வகுப்புகள்

பாடநெறி: ✶ பொது அறிவு ✶ பொதுஉளச்சார்பு

ஒகஸ்ட் 15ஆம் திகதி போட்டிப் பரீட்சை நடைபெற இருப்பதால்
15 தினங்கள் தொடர்ச்சியான வகுப்புகள்

★ நாளாந்தம் 3 மணித்தியாலயங்கள் (மு ப 9-12 வரை)
★ இலவச பாடக் குறிப்புகள்.

● கட்டணம் ரூபா 250/-

**ASTAN INSTITUTE,**
101/10, STANLY ROAD, JAFFNA.
(மக்கள் வங்கிக்கு அருகாமை) (சி/3117)

# ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை
## ஒகஸ்ட் - 1989

ஒகஸ்ட் பிற்பகுதியில் நடைபெறவிருக்கும் 25, 000 ஆசிரியருக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான விசேஷ தீவிரப் பயிற்சி வகுப்புகள் இத்துறையில் அனுபவமுள்ள விரிவுரையாளர்களால் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பாடங்கள்:
(1) பொது அறிவு (2) பொதுஉளச்சார்பு

✶ பரீட்சை தொடங்கும் வரை தினசரி வகுப்புக்கள்
✶ கடந்தகால பரீட்சை வினாத்தாள்களும் விடைகளும்
✶ மாதிரி வினாத்தாள்களும் விடைகளும்.

ஆரம்பம்: 02 - 08 - 1989

Fees, ரூபா 200/-

● குறிப்பு: குறிப்பிட்ட தொகை மாணவர்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுவர்.
மேலும் விபரங்களுக்கு:

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION,**
16, 3rd CROSS STREET,
JAFFNA.
(O. L. R. தேவாலய மேற்குப் பக்கம்) (சி/[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ***மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான பஞ்சரத உற்சவ சிறப்பு மலர்***

## மலரடியே கருதி வாழ்வோம்!

திங்கேயில்லாதபடி வழிபடுவோர் தாம் வாழச் செய்யும் அண்ணல்
பாங்கேவந் தமரரெல்லாம் பணி செய்யும் பெருங்குமரன் பரவும் ஈழத்
தாங்கேயும் திருக்கோவிற்சடவை மாவிட்டபுரத் தணி செய்கின்ற
காங்கேயமூர்த்தியிரு மலரடியே துணையாகக் கருதி வாழ்வோம்.

கி. வா. ஜகந்நாதன்.


குருவே! பரமன் மகனே!
குகையில் வளரும் கனலே!
தருவாய் தொழிலும் பாபனும் அமரர்
சமராதிபனே! சரணம் சரணம்!

தெல்லிப்பளை
ப. நோ. கூ. சங்கம்
(வரையுள்ளது)
தெல்லிப்பளை.

வருவாய் மயில் மீதினிலே
வடிவேலுடனே வருவாய்!
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனமும்

டொலர் மார்க் அலுமினியம் பாத்திரங்கள்
சில்லறையாகவும் மொத்தமாகவும்
பெறக் கூடிய ஒரே இடம்

குஷிபா
டிஸ்ரிபியூட்டர்ஸ் லிமிட்
மாவிட்டபுரம்.

We Never Know Where
Business Will Take You
But We Are Sure That.
LANKA CEMENT
Will Take You To Build
A SWEET HOME
புதிய தலைமுறை
நீண்ட நாள் பாவனைக்கும் உறுதிக்கும்
இன்று பாவிப்பது
★ லங்கா சீமெண்ட் ★
நாம் சொல்லுகிறோம்
பாவனையாளர்கள் உறுதிப்படுத்துகிறார்கள்
லங்கா சிமெண்ட் லிமிட்டெட்,
கீரிமலை வீதி, காங்கேசன்துறை.

Head Office
Lanka Cement Limited
7th FLOOR,
130, W. A. D.
Ramanayake Mawatha,
COLOMBO- 2,

அடியார் பலரிங் குளரே;
அவரை விடுவித் தருள்வாய்!
முடியா மறையின் முடிவே! அசுரர்
முடிவே கருதும் வடிவே லவனே!

புடைவை, அழகுப் பொருள் விற்பனையாளர்
மொடேண் ரெக்ஸ்,
மெயின் வீதி,
தெல்லிப்பளை.


# பாவவினை அறுத்தருளும் மாவிட்டபுரக் கந்தன்

### மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்

பழைமைக்குப் பழைமையாய்ப்புதுமைக்குப்புதுமையாய் கால தத்துவங் கடந்து கன்ம தத்துவங் கடந்து வேதமணங் கமழ, ஞானஒளி வீசி விளங்கி ஈழநாட்டின் வரலாற்றில் இடம்பெற்றுள்ள தொன்மைத் திருத்தலம், மாவிட்டபுரம் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயில்:

சன்மவினை மேவக் குன்ம நோயாலும், குதிரை முகத்தாலும் பீடிக்கப்பட்ட தென்னகத்து இளவரசி மாருதப்புரவீகவல்லி என்ற மங்கை நல்லாள் ஏழாம் நூற்றுண்டளவில் நகுலமலை நன்னீர் ஊற்றுக்கள் வங்கக் கடலுடன் சங்கமிக்கும் புண்ணிய தீர்த்தப் புனலாடி முருகப்பெருமானை நீள நினைந்து நித்தலும் கை தொழுது வழிபாடு செய்து தன் தீராப்பிணி தீர்த்துக் கொண்ட அற்புத அதிசய உற்பாத நிகழ்ச்சியின் பின்னணியில் எழுந்தது இவ்வாலயம் என்பது வரலாறு.

மாவை ஆலயம், மாருதப்புரவல்லியாலும், அவளின் பின்னர் வந்த அரச பரம்பரையினராலும், ஆங்கையாரியச் சக்கரவர்த்திகளாலும், நாட்டுக்கோட்டைச் செட்டிமாராலும், வணிகப்பெருங்குடி மக்களாலும், செல்வச் சீமான்களாலும் மாருதப்புரவீகவல்லியால் தருவிக்கப்பட்ட தில்லைமூவாயிரவரில் முதல்வருள் ஒருவரான பெரியமனத்துளார் பரம்பரையினரின் நிர்வாகத்தில் காலத்துக்குக் காலம் பேணி வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது.

இன்று திக்கெல்லாம் விளங்கும் திருக்கோயிலாக மூர்த்தி, தலமோடு இனிய தீர்த்தமுறு திவ்யத் தலமாக, திங்கள், செங்கதிர், மங்குல் தங்கும் ஓங்கி உயர்ந்த கோபுரமும், துங்கமா மதில்களும், மண்டபங்களும், பஞ்சரதமோடும் பரந்து விரிந்த திருவீதிகளும், தேனூர் பூஞ்சோலைகளும், இன்னோரன்ன பிற சிறப்புக்களும் வாய்ந்த மங்கள வளம் பொங்கும் மாபெரும் கோயிலாகத் திகழ்கிறது.



ஆதியாய், அநாதியாய், அன்பே வடிவாய், அழகே உருவாய், ஆனந்த அமுதமாய், அவனிவாழ் மக்கட்கெல்லாம் அருள் பாலிக்கும் மாவைவளர் அறுமுகப் பரஞ்சுடரின் கருணைபொழி திருமுகங்களும், அழகிய மகுடமும், அணிபணிகளேந்திய அகண்ட மார்பும், ஆயுதம் பல தாங்கிய பத்துக் கரங்களும், அபயவரத கரமிரண்டும், அவற்றில் தாங்கிய அழகியவேலும், குக்குடக் சேவல்கொடியும், சிறகுவிரித்த சிக்கி வாகனமுமாய்க் காட்சி தரும் முழுவதும் அழகிய மூர்த்தியையும் அவனருகே மலர்மாலை அணிந்த தோள்களும், முழுமதியன்ன வதனங்களும், தெய்வமொழித் திருவாயில் புன்னகையும், அணிபணிகள் பூண்ட திருமேனியும், சிலம்பணி திருவடிகளையுமுடைய தேவியர் இருவரையும் பார்க்கும்போது,

'பக்தித் திருமுக மாறுடன்
பன்னிரு கைகளுமாய்த்
தித்தித் திருக்கும் திருவமுது
கண்டேன்'

என்ற அருணகிரியார் திருவாக்கு எம்முள்ளத்தில் வளராமல் விடாது.

மாவைமுருகன் மேல் ஆராத பக்திகொண்ட அடியவரொருவர்,

'தெய்வநிறை சந்நிதிச்
செந்நின்று கைநீட்டித்
திருவருட் டிறங்கனுவனித்
தேயுமன மழியுமவர்
செங்கைக்கு மெட்டும் நீ...'

என்று மாவை பிள்ளைத்தமிழ் மூலம் பாடுகிறார்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமான முருகப்பெருமானை மிகுந்த பக்தியுடன் தரிசிப்பின், 'வேண்டிய வரம் கொடுப்பான் மெய்கண்ட தெய்வம். இத்தெய்வமல்லால் புவியில் வேறு இல்லை' எனக் குமரகுருபர சுவாமிகள் வேளூர் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழில் கூறியது போல நாமும் வேண்டிய வரங்களைப் பெறமுடியும். ★

# பஞ்சரதப் பவனி காண்போம்!

### - எஸ். ஆர். ஞானசுந்தரம் -

ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்தவரை கடந்த பல ஆண்டுகளாக அமைதியையும், நிம்மதியையும் இழந்து ஆறுதலைத் தேடி அலைந்து திரியும் நிலையில் இருக்கிறார்கள். தமது வாழ்விடங்களிலிருந்து இடம் பெயர்ந்து அகதி என்ற முத்திரையுடன் உள்ளூரிலும், வெளியூரிலும் ஒதுங்கி, மறைந்து வாழும் நிலை நீடித்து வருகிறது: எந்த நேரம் என்ன நடக்குமோ என்ற அச்சம் மக்களை வாட்டி வதைக்கிறது.

இந்நிலையில் எம்மால் முடியும் வரை ஓடியாடிக் களைத்து இறுதியில் எமது சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி எமக்கு மேலே இருக்கிறது என்ற உண்மையை உணர்கிறோம். அதனிடம் எம்மை ஒப்படைத்து விடுகிறோம்: அந்த சக்தியே இறைவன் என சமயங்கள் கூறுகின்றன:

எங்கும் நிறைந்திருக்கும் சர்வ வல்லமை பொருந்திய இறைவனை அடியார்கள் வணங்கி அருள் பெற்றுய்ய வசதியாக ஆலயங்கள் அமைக்கப்படுகின்றன. இந்த வரிசையில் சரித்திர வரலாற்றுச் சிறப்புப் பெற்றுத் திகழும் முருகன் ஆலயங்களில் மாவிட்டபுரம் முருகன் ஆலயமும் ஒன்றாகும்.

சோழ அரசகுமாரி மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகமும், குன்ம நோயும் நீங்கப்பெற்ற காரணத்தால் உருவாகிய இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றால் சிறப்பு வாய்ந்தது. நிமிர்ந்து ஓங்கிய இராஜகோபுர சிறப்பும், ஆலய மூர்த்திகளின் கலைச்சிறப்பும், வேதாகம மரபுகள், இசை மரபுகள் பேணிக்காக்குமிடம் சிறப்பும், வினை தீர்க்கும் அருட்சிறப்பும், அபிடேக ஆராதனைச் சிறப்பும், பஞ்சரதங்களின் சிறப்பும், காவடிகள் ஆடிவரும் சிறப்பும் இவ்வாலயத்தின் பெருமையை எடுத்தியம்புகின்றன.

அல்லலுறும் பக்தர்களுக்கு அபயம் என்று கூறி அரவணைத்து ஆறுதல் அளிப்பான் முருகன் என சமய நூல்கள் கூறுகின்றன. அசுரத் தன்மையை அழித்து ஆக்கம் தருவான் முருகன் என புராணங்கள் கூறுகின்றன. கலியுக வரதன் கந்தன் என சமயப் பெரியார்கள் கூறுகின்றனர். துன்பத்தில் உழல்பவர்களையும் துன்பம் நீக்கி காத்திடுவான் கந்தன் என முருகனடியார்கள் கூறுகின்றனர்.

இவ்வாறெல்லாம் போற்றிப் புகழப்படும் முருகன் எமக்கு வரும் இன்னல்களையும் போக்கியருளுவான் என்ற நம்பிக்கையுடன் அவன் பஞ்சரதங்களில் ஏறிவரும் இந்த நன்னாளில் அவன் பாதாரவிந்தங்களில் அடிபணிந்து வணங்கி அருள் பெற்றுய்வோமாக. ★

மலர் ஏற்பாடு:
ஞானகுகன்


கூறுபடப் பல கோடி யவுணரின்
கூட்டத்தைக் கண்டு
கொக்கரித் தண்டங் குலுங்க நகைத்திடுஞ்
சேவலாய்!

மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றமும்
மாணவர் மன்றமும் இணைந்து
கல்வி, சமய, சமூகப் பணிகளில்
35 வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றிவரும்
சேவை அமைப்பு.


## மாவைப்பதி வாழ் முருகனே!

அடியவர் துன்பம் துடைத்திடும்
அம்பிகையின் புதல்வனே!
ஆறுதல் தேடி வருவோரைக் காத்திடும்
ஆறுமுக வேலவனே!

'ஓமெனும்' பொருளை உலகுக்காற்றும்
ஒப்பற்ற சிரோன் மணியே!

மாமயிலேறி வள்ளிதெய்வானையுடன் வரும்
மாவைப் பதிவாழ் முருகனைத் தொழுதடுவோம்!
மலரடி போற்றி! போற்றி!

மாவையூர். ஜெயா


சுருதிப் பொருளே வருக
துணிவே கனலே வருக!
சுருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல்!

குமரன் ட்ரேடர்ஸ்
யாழ்ப்பாணம் வீதி,
மாவிட்டபுரம்.
(மொத்த, சில்லறை வியாபாரம்)

முருகா!
அறிவாகிய கோயிலிலே
அருளாகிய தாய் மடிமேல்
பொறி வேலுடனே வளர்வாய்! அடியார்
புதுவாழ்வுறவே புவி மீதருள்வாய்!

யூனிவேர்சல் மெடிக்கல் சென்ரர்
கே. கே. எஸ். வீதி,
தெல்லிப்பளை.

தோகைமேல் உலவுங் கந்தன்!
சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை
வணங்குவது எமக்கு வேலை!

கிறிப் ஸ்ரோர்ஸ்,
(GRIFFISO)
கே. கே. எஸ். வீதி,
தெல்லிப்பளை.

அமராவதி வாழ்வுறவே
அருள்வாய் சரணம்! சரணம்!
குமரா பிணியாவையுமே சிதறக்
குமுறும் சுடர் வேலவனே, சரணம்!

★ பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள்
★ அலுவலகப் பொருட்கள், உபகரணங்கள்
★ உள்ளூர் வெளிநாட்டு சஞ்சிகைகள்,
★ அழகுப் பொருள்கள்.
ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள

சேந்தன் என்ரப்பிறைசெஸ்,
பிரதான வீதி, மாவிட்டபுரம்.

மாவை முருகன் அருளினால்
அனைவரும் உவகையுடனும், சாந்தத்துடனும்,
சமாதானத்துடனும் ஆனந்தத்துடனும்
ஆரோக்கியத்துடனும் பொறுமையுடனும்
அன்புடனும் வீரத்துடனும். செல்வத்துடனும்
வாழ வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

Dr. K.R.K. Rasadurai
Maviddapuram Dispensary,
Maviddapuram.

தெல்லிப்பளை தெங்கு பனம்பொருள் உற்பத்தி
விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்

கற்பகம் பொருட்கள் விற்பனை
மற்றும் சேவைகள்
இந்த மலரின் வெளியீட்டுக்கு
எமது ஸ்தாபனத்தின் நல்லாசிகள்!

ஆறு சுடர்முகங் கண்டு
விழிக்கின்பமாகுதே — கையில்
அஞ்சலெனுங் குறி கண்டு
மகிழ்ச்சியுண் டாகுதே.

தனலட்சுமி ஸ்ரோர்ஸ்
கே. கே எஸ் வீதி, தெல்லிப்பளை.

நீறு படக் கொடும்பாவம் பிணிபசி
யாவையும் இங்கு
நீக்கி அடியரை நித்தமுங் காத்திடும்
வேலவா!

திரு. லட்சுமிநாதன்,
கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்கையம்பாள் சித்திரத் தேர்த்திருவிழா சிறப்பிதழ்

# துயர் நீக்கி வினை போக்கிடும்
# அருட்தாய் துர்க்கை அம்மன்

இவ்வாலயம் சாவகச்சேரி நுணுவில் மேற்கில் விளைவேலி என்ற கிராமத்தில் ஸ்தல விருட்சமாக தாழைகளைக் கொண்டு அமைந்துள்ளது. இவ்வாலயம் 1805ஆம் ஆண்டு சந்தனக்குருக்கள் பரமசாமிக் குருக்கள் எனச் சொல்லப்படும் பரம்பரை வாரிசினால் ஸ்தாபிக்கப்பட்டது. தற்பொழுது இவ்வாலயத்தை மேற்கூறிய வாரிசின் வழி வந்த பிரம்மஸ்ரீ. ப. மகாகண பதிசர்மா அவர்கள் கால நேரம் தவறாது நித்திய நைமித்திய பூஜைகளை நடத்தி அறங்காவலராகவும் குருக்களாகவும் இருந்து அருந் தொண்டாற்றி வருகி ர்.

இவ்வாலயத்தில் ஆதிகாலத்தில் மூலவிக்கிரகமாக தாம்ர விக்கிரகம் இருந்து வந்தது. அதன் பின் 1958ஆம் ஆண்டில் இந்தியாவில் சிதம்பரத்திலிருந்து சிலாவிக்ரகமாக வழங்கப்பெற்று இங்கு கொண்டு வந்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.


அதன் பின் திருப்பணிகள் விரிவாகச் செய்யப்பட்டு ஜீர்ணோத்தாரண மகா கும்பாபிஷேகம் 1981ஆம் ஆண்டு ஆனிமாதம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இவ்வாலயத்தில் ஆனிமாதத்தில் 10 நாட்கள் அலங்கார உற்சவமும், ஆடி மாதத்தில் 10 நாட்கள் இலட்சார்ச்சனை விழாவும், நவராத்திரி விழா, கேதார கௌரீஸ்வர கௌரி விரதம் 21 நாட்களும், திருவெம்பாவை பூஜையும், ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் விசேஷ உற்சவமும் ஒவ்வொரு பௌர்ணமியிலும் சுமங்கலி பூஜையும் (தீப பூஜை) அத்துடன் நித்திய பூஜைகளும் கிரமமாக நடைபெற்று வருகின்றன. மேலும் 1988 ஆம் ஆண்டு பரிவார மூர்த்திகளாக விநாயகர், வள்ளி தெய்வயானை சமேதராக சுப்பிரமணியர், நவக்கிரகமூர்த்திகள் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இத்துடன் 1989 இல் 23-07-89 அன்று புதிதாகக் கொடிஸ்தம்பம் ஸ்தாபிக்கப்பட்டு துவஜாரோகணமும் சிறப்பாக நடைபெற்று 31-07-89 இன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சித்திரத் தேர்த்திருவிழாவும் நடைபெறு

**- ஆர். சாந்தா -**

கின்றது: ஆயிரக்கணக்கான அடியார்கள் தினமும் இவ்வாலயத்துக்கு வந்து அம்பாளைத் தரிசித்து அனுக்கிரகம் பெற்று வருகின்றனர்.

இவ்வாலயத்தின மூலமூர்த்தி விஷ்ணு துர்க்கையாக வடக்கு நோக்கி வீற்றிருந்து திருவருள் பாலித்து வருகின்றாள். ஆலயத்தின் கிழக்கே தீர்த்தக் கிணறு அமைந்துள்ளது. இதில் பல்லாயிரக் கணக்கான நோயாளிகள் தீர்த்தமாடி அம்பாளைத் தொழுவதால் தமது நோய் நீங்கப் பெறுகிறார்கள். ஆலயத்தின் ஸ்தல விருட்சமான தாழைமரம் பூப்பதே தவிர காய்ப்பது கிடையாது. பல கன்னியர்கள் திருமணமாகாமல் இவ்வாலயத்தில் சுமங்கலி பூஜை செய்து வந்ததன் பலனாக இவ்வாலயத்திலேயே அவர்களுக்குத் திருமணமும் நடைபெற்றுள்ளது. அது மட்டுமல்லாது இவ்வாலயத்தின் அருகே கல்வயல் என்னும் கிராமத்தில் வசிக்கும் ஓர் ஆசிரியை திருமணமாகிப் பல வருடங்களாக மகப்பேறின்றி பலமுறை அம்பாளிடம் முறையிட்டு வணங்கி வந்தார். அவருக்கு மனம் இரங்கி அம்பாள் திருவருள் பாலித்து தற்போது அவருக்குப் பல மகப்பேறு கிடைத்துள்ளது. இவ் அம்பாள் திருவருளால் கிடைத்த முதற்குழந்தைக்கு துர்க்காதேவியின் திருநாமத்தையே சூட்டியுள்ளார்.

இவ்வாறாக இவ் அம்பாளின் புதுமைகள் ஏராளம். எனவே அம்பாளின் அநுக்கிரகம் எல்லோருக்கும் கிடைக்கும்படி பிரார்த்திப்போம். ★



மலர் ஏற்பாடு:
இ. ரவீந்திரன்

## கடைக்கண் பாராயோ?

தாளை மர நிழலிலே
தமிழ் பாடும் சோலையிலே
அன்னையவள் புகழ் பாடும்
ஆலயத்தை நாம் கண்டோம்

ஐயனார் அருகினிலே
மருதடியான் எதிரினிலே
அன்னையவள் கோயில் கொண்டாள்
விளைவேலிப் பதியினிலே

வெள்ளம்போல் பக்தரெல்லாம்
வெள்ளோட்டம் காண வந்தார்
சித்திரத் தேர்தனிலே
ஸ்ரீ துர்க்கை உனைக் கண்டார்

கலியுகத்து மாந்தரெலாம்
கலிகளெல்லாம் நீங்கிடவே
கலைத்தேரில் வாராயோ
கடைக்கண் பாராயோ?

தாளையப்பதி எஸ். முரளி

வற்றாத கருணை எப்போதும் பொழியும்
துர்க்கா துரந்தரியே!
தேரேறி வருக, வருக!!

இன்றைய நாகரிகம்
நாளைய அறிமுகம்

**மம்மி டடி**

இல. 100, கண்டி றோட்,
சாவகச்சேரி.

தேர்த் திருவிழா சிறப்புற
துர்க்கா தேவியை வேண்டுகின்றோம்

அறுசுவைச் சிற்றுண்டிகளுக்கும்
குளிர்பானங்களுக்கும்

**கிருயோன் கூல் & கோப்பி பார்**

இல. 2, நவீன சந்தை,
சாவகச்சேரி.

தேரேறி வருகின்ற தேவியை
இன்னருள் நாடி இறைஞ்சுகின்றோம்!

சகல வித இரும்புப் பொருள்களுக்கும்

**பிரோசா ரேடர்ஸ்**

31, கண்டி வீதி,
சாவகச்சேரி.

தேர் வெள்ளோட்ட விழாவும் உற்சவமும்
சிறப்புற எமது நல் வாழ்த்துக்கள்!

★ சகலவித பாடசாலை உபகரணங்கள்
★ நூல்கள் ★ சஞ்சிகைகள் ★ வாழ்த்து
மடல்களையும் பெற்றுக் கொள்ள

**சிவம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ், புத்தகசாலை**

சாவகச்சேரி.

தேவியைப் போற்றினால்
தேவைகள் பூர்த்தியாகும்.

பாடசாலை உபகரணங்கள், சஞ்சிகைகள், அழகு
சாதனப் பொருள்கள், அன்பளிப்புச் சாதனங்கள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள

**அருள்நாயகி புத்தகசாலை**

பஸ்நிலையம், கொடிகாமம்.

அம்பிகையைச் சரணடைந்தால்
அதிக வரம் பெறலாமே!

நவயுகத்திற்கேற்ற நாகரிக ஆடைகளுக்கும்
நங்கையரின் அழகுசாதனப் பொருள்களுக்கும்

**அருண் ரெக்ஸ்ரைல்**

இல: 1 கச்சாய் வீதி,
கொடிகாமம்,

தேரேறும் துர்க்கை அம்மன்
அருள் வேண்டி நிற்கின்றோம்!

★ பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகம் வரையிலான பாடநூல்கள்.
★ ஸ்ரேஷனறிப் பொருள்கள்.
★ வாழ்த்து மடல்கள்.
★ இந்திய சஞ்சிகைகள்.
★ திருக்கணித பஞ்சாங்கம், கலண்டர், டயறி, சோதிடமலர்

முதலியவற்றைப் பெற்றுக்கொள்ள

**திருக்கணிதம்**

சாவகச்சேரி.

தேவி தேரேறும் இந்நாள்
அடியார் அகமகிழும் நன்னாள்
நவயுகத்திற்கேற்ற நவ நாகரிக ஆடைகளுக்கு
★★★★★★

**குறிஞ்சி ஜவுளி சமுத்திரம்**

★★★★★★

கண்டி வீதி,
சாவகச்சேரி.

தேரேறும் அம்பாளைப் போற்றுவோம்!

பலசரக்குப் பொருள்களுக்கு

**★ பாலா ஸ்ரோர்ஸ் ★**

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

அன்னையின் எழிலில் அகிலமும் மகிழ்கிறது!

பாடசாலை உபகரணங்கள்
இந்திய சஞ்சிகைகள்
ஸ்ரேஷனறிப் பொருள்கள்

**R. இராஜதுரை**

நியூஸ் ஏஜென்ட்,
இருபாலை சந்தி,
கோப்பாய்.

துர்க்கையைத் துதிப்போர்க்குத் துன்பமில்லை!

சிறந்த வேலைப்பாடுள்ள தங்க நகைகளுக்கு

**சிமாட்டி நகைக மாளிகை**

220 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

புதுமைகள் பலபுகுத்தி மக்களின் நன்மதிப்பை பெற்றுவரும் அஷ்டலக்ஷ்மி கலண்டர் நிறுவனத்தின் மற்றுமோர் சிறந்த தயாரிப்பு!

பாலர் வகுப்பு, முதலாம் வகுப்புகளுக்காக புதிய பாடத்திட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்ட அரிச்சுவடி

**அஷ்டலக்ஷ்மி பாலர் தமிழ்**

◉ உயிர் மெய் எழுத்துக்களை நான்கு வகையான படங்கள் சொற்கள் மூலம் அறிதல்
◉ படங்களைப் பார்த்துக் கதை சொல்லுதல்
◉ ரோமன் அரபு இலக்கங்களுக்கான தமிழ் எழுத்து
◉ படங்கள் மூலம் செயல்கள் நற்பழக்கங்கள் அறிதல்
◉ இன்னும் பல சிறந்த அம்சங்கள்!

லிதோ பிறின்றில்
தமிழ், முஸ்லிம் பாலர்களுக்கென
உருவாக்கப்பெற்ற 32 பக்கங்கள்
அடங்கிய அற்புதத் தயாரிப்பு!

விலை ரூ 9/50

வெளியிடுவோர்:
சிவா பிறின்டேர்ஸ், கைதடி (இலங்கை)

துர்க்கை அம்மன் சித்திரத் தேர் ஏறும்
காட்சி காண வாரீர்!

மரம், தளபாடங்கள் மற்றும் கட்டட வேலைகளுக்கு

**KAAGO** **காகோ**

104, Saddanathar Road,
Nallur, Jaffna.

104, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

புதுத்தேரில் பொலிவுடன் வீதிவலம் வரும் அம்பாளின் தேர்த்திருவிழா
சிறப்புறவும் தேவி அருள்வேண்டும் அடியார்வாழ்வு சிறப்புறவும்
எமது நல்லாசிகள்!

★ ஆங்கில மருந்து வகைகள்
★ பாடசாலை உபகரணங்கள்
★ டட்டர், மாஜரீன்
★ பால்மா வகைகள்
★ வர்ண படச் சுருள்கள்
★ வீட்டுப்பாவனைப் பொருள்கள்;

ஆகியவற்றை மலிவாகப் பெற்றுக்கொள்ள

**அம்பாள் பார்மஸி**

இல: 1, நவீன சந்தை கட்டடம், சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்!

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிருஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்.

பொருள்!

பிறரோடு கலந்து பழகி மகிழ முடியாதவர்க்கு, மிகப்பெரிய இந்த உலகம் ஒளியுள்ள பகற் காலத்திலும் இருளில் கிடப்பதாம்.

**உதயன்**

இல. 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805, 22073
யாழ்ப்பாணம்.
31 - 07 - 1989 த. பெ. இல. 23

# புரந்தன் ஒரு சவால்!

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை இயங்கச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் எழுந்துள்ளது. இராணுவ நடவடிக்கைகளைக் காரணம் காட்டி மூடப்பட்ட அந்தத் தொழிற்சாலை இன்னமும் சரிவர இயங்க முடியாத நிலையில் இருப்பது பழைய விவகாரம்.

வடக்கின் இரண்டு பெரும் தொழிற்சாலைகளில் ஒன்றாகப் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையும் விளங்கியது. அது பல வருடங்களாக நாட்டுக்குத் தேவையான குளோரின் மற்றும் கோஸ்டிக் சோடா ஆகிய இரசாயனப் பொருள்களில் பெரும் பகுதியை உற்பத்தி செய்து வந்தது. பல சந்தர்ப்பங்களில இலாபகரமாகவும் இயங்கியது எனலாம்.

எனினும் ஒரு கட்டத்தில், தொழிற்சாலையின் பிரதான இயந்திரம் மிகப்பழையது என்ற காரணத்தைக் காட்டி தொழிற்சாலையை மூட வேண்டும்; அதற்குப் பதில் புதிய தொழிற்சாலையை தெற்கே அமைக்க வேண்டும் என்ற நயவஞ்சக எண்ணம் கொழும்பில் அதிகாரத்தில் இருந்தவர்கள் மனதில் உதித்தது.

1977 தேர்தலின் பின் கைத்தொழில் அமைச்சராகப் பதவி ஏற்ற திரு சிறில் மத்தியு, பரந்தன் தொழிற்சாலையை எப்படியேனும் மூடிவிட வேண்டும் என்று சங்கற்பம் பூண்டார். அதற்கான காரண காரியங்களைத் தமது அதிகாரிகள் மூலம் செயற்கையாகவே தோற்றுவித்தார். வெளிநாட்டு நிபுணர்கள் மூலமும் பரந்தன் தொழிற்சாலை இயந்திரம் முற்றிலுமே உதவாது. தொழிற்சாலை உரிய இடத்தில் அமையவில்லை என்றெல்லாம் சொல்லுவிக்க முயன்றார். செயற்படுத்தவும் ஒற்றைக் காலில் நின்றார். ஆனால் அவர் தாம் எண்ணியதைச் செய்வதற்கு முன்னரே பதவியைப் பறிகொடுத்துப் பெட்டிப் பாம்பாக வேண்டியதாயிற்று!

மழை ஓய்ந்தாலும் தூவானம் விடாத கதையாக அடுத்து பதவியேற்ற கைத்தொழில் அமைச்சர் திரு. டென்சில் பெர்ணண்டோவும் பழையவரின் பல்லவியை சிறிது காலம் பாட முற்பட்டார். பரந்தன் தொழிற்சாலையை மூடி, அங்கு பணிபுரிந்த ஊழியருக்குத் தெற்கில் மாற்று வேலைவாய்ப்பு வழங்குவது குறித்தும் 'அலட்டினார்.'

எனினும் இரசாயனத் தொழிற்சாலைக்கு அப்படி ஒன்றும் நடக்கவில்லை! இயங்காமல் உற்பத்தி தொடங்காமல் இருப்பதைத் தவிர.

வடக்கு-கிழக்கின் பொருளாதார வளர்ச்சிக்குப் பல புதிய கைத்தொழில்கள் — தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டாகவேண்டும். அவ்வாறிருக்கையில் பென்னம் பெரும் தொழிற்சாலைகளில் ஒன்றான பரந்தனை மூடி வைத்துக்கொண்டிருப்பதா?

தொழிற்சாலை மாகாண அரசின் நிர்வாகத்துக்குள் வந்துவிட்டதால் இனியும் அதனைக் கைவிட்டு இருக்கலாமா? இயன்றளவு விரைவில் புத்துயிர் கொடுக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்; அதற்கான முயற்சிகளில் இறங்க வேண்டும். கையிலிருந்த பொருளைக் கைவிட்டுப் புதியதைத் தேடும் நிலை இருக்கக்கூடாது. புதிய தொழிற்சாலை எதையும் நிறுவுவதற்கு முன்னர் பரந்தனைச் சீராக்கவேண்டும். மறுசீரமைக்கவேண்டும்.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையைப் புதுப்பிப்பதற்கும், அங்கு உற்பத்தியைத் தொடங்குவதற்கும், நீண்டகாலமாகப் பாதிக்கப்பட்டுக் கஷ்டப்படும் தொழிலாளர் இன்னல்களைத் தீர்ப்பதற்கும் திட்டமிட்ட முறையில் நடவடிக்கையில் இறங்குவது அவசியம்.

பல்நூற்றுக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வும், வளமும் மட்டுமன்றி வடக்கின் பொருளாதார மேம்பாடும் பரந்தன் விடயத்தில் தங்கி உள்ளது. இதனை மறந்துவிடக்கூடாது.

அது மூடப்பட்டுப் பறிபோகப்போகிறதே என்று கவலைப்பட்ட நிலை மாறி, அதற்குப் புத்துயிர் கொடுத்து திறம்பட இயங்கச் செய்யும் பொறுப்புத் தமிழர் கைக்கு வந்துள்ளது. இதனை ஒரு சவாலாக ஏற்று, எவ்வளவு விரைவில் அங்கு உற்பத்தி தொடங்கப்படுகிறதோ அவ்வளவுக்கு அது தமிழர்தம் திறமைக்குச் சான்றாகவும் அமையும். எங்களாலும் இயலும் என்பதை எடுத்துக்காட்டவும் முடியும்.

## இன்று தேர்

சாவகச்சேரி கச்சாய்வீதி சந்தன முதலிச்சிபுலம் ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவம் ருபத்திமூன்றும் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இன்று தேர்த்திருவிழாவும் நாளை ஆகஸ்ட் முதலாம திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (க-117)

## உற்சவம்

ஏழாலை புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் கடந்த 26ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிச் சிறப்பாகநடைபெற்றுவருகிறது

ஆகஸ்ட்மாதம் 3ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (த)

## வரவேற்பு

இலங்கையில் இருந்து அமைதிப்படையினர் படிப்படியாக வெளியேறுவதை அமைதிப்படையின் முன்னாள் தளபதி தெபிந்தர் சிங் வரவேற்றிருக்கிறார்.

இலங்கை நிலைமையில் அரசியல் தீர்வு ஒன்றுதற்போது ஏற்பட்டிருப்பதாகவும் திரு தெபிந்தர் சிங் தெரிவித்தார். (உ-எ)

## அரச செலவில் அடக்கம்

கந்தர்மடம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞரின் சடலம் அரச செலவில் அடக்கம் செய்யப்படவுள்ளது.

நேற்றுவரை இச்சடலம் எவராலும் அடையாளம் காணப்படவில்லை. (இ-10)

★ அக்டோபர் புரட்சிக்கு பின்னர்

# முதலாவது எதிர்க்கட்சி ரஷ்யாவில் அமைப்பு!

மாஸ்கோ, ஜூலை 30

அக்டோபர் புரட்சியின் பின்னர் முதல் தடவையாக சோவியத் யூனியனில் எம்.பி.க்கள் எதிர்க்கட்சி ஒன்றை அமைத்துள்ளனர்.

300 எம். பிக்கள் அமைத்துள்ள இந்த அமைப்பிற்கு பிரபல சோவியத் எதிர்க்கட்சிப் பிரமுகரும் எம். பி. யுமான திரு. போரிஸ் யெல்ட்சின் தலைமை வகிக்கிறார்.

அரசியல் சீர்திருத்தக் கொள்கை அமுலை துரிதப்படுத்தும்படி புதிய எதிர்க்கட்சி கோரியுள்ளது.

புதிய கட்சிக்கு இணைப்புக் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

சொந்தமாக பத்திரிகை ஒன்றையும் இந்த அமைப்பு ஆரம்பித்துள்ளது. (எ)

## சூடான் தலைவர் சவூதி விஜயம்

சூடானின் இராணுவத் தலைவர் பிரிகேடியர் அல்பஷீர் மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு சவூதி அரேபியா சென்றிருக்கிறார்.

ஜெத்தா விமானநிலையத்தில் அவரை சவூதி மன்னர் வரவேற்றார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சவூதியிடம் உதவி கோருவதே சூடான் தலைவன் நோக்கமாகும். (எ)

## பூரண அதிகாரங்களைப் பெற்ற ஈரான் புதிய ஜனாதிபதி!

தெஹ்ரான், ஜூலை 30

ஈரானின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி என்ற பெருமை கடந்த வியாழன் நடந்த தேர்தலில் அமோக வெற்றியீட்டிய நாடாளுமன்ற சபாநாயகர் ரஸ்வஞ்ஜானிக்குக் கிடைத்துள்ளது.

ஜனாதிபதிக்குக் கூடிய அதிகாரங்களை வழங்குவது, பிரதமர் பதவியை ஒழிப்பது ஆகிய அரசியல் சட்டத் திருத்தங்களையும் ஏற்றுக் கொள்ளுவது என்று வியாழன் நடந்ததேர்தலில் 100க்கு 90 சத விதமான வாக்காளர்கள் வாக்களித்தனர்

இதுவரை ஜனாதிபதி பதவி சம்பிரதாயபூர்வமான ஒன்றாகக் கருதப்பட்டது.

புதிய ஜனாதிபதியான ரஸ்வன் ஜானியே தனது தலைமையில் அமைச்சரவை ஒன்றை நியமிக்க இருக்கிறார்.

பிரதமர் என்ற பதவி இனி இருக்காது. கடந்த பத்தாண்டுகளாக வெளியுறவு அமைச்சராக இருந்த அலி அக்பர் வேலாயடிக்குப் பதிலாக புதிய ஒருவரை நியமிக்க புதிய ஜனாதிபதி தீர்மானித்திருக்கிறார். (எ)

## சீக்கிய மாணவர் தலைவர் மான்சிங் பஞ்சாபில் விடுதலை

சண்டிகார், ஜூலை 30

கடந்த ஐந்தாண்டுகளாக சிறை வைக்கப்பட்டிருந்த சீக்கிய மாணவ தலைவரான மான்சிங் என்பவரை இந்திய அரசு நேற்று விடுதலை செய்தது.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் பஞ்சாப் நிலைமையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியாக இந்திய அரசு மான்சிங்கை விடுவித்திருப்பதாக புதுடில்லியில் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

1984இல் பஞ்சாப் பொற்கோயில் மீது இந்திரா காந்தி தலைமையிலான அரச நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து மான்சிங் கைது செய்யப்பட்டார். (எ)

## பலஸ்தீன நிலைமை

ஜெருசலம் ஜூலை 30

கைப்பற்றப்பட்ட காஸா மற்றும் மேற்குக் கரைப்பிரதேசத்தில் இஸ்ரவேலி ராணுவம் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 90 வயதுப் பெண் உட்பட 9 பலஸ்தீனியர் படுகாயமடைந்தனர். (எ)

## 14 பேர் பலி

முஜாஹதீன் கெரில்லாக்கள் காபூல்மீது நடத்திய தாக்குதலில் 14 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; 30 பேர் வரை காயமடைந்தனர். (எ)

இந்து சமுத்திரத்தை

## அமைதிப் பிரதேசமாக்கும் திட்டம் நிராகரிப்பு

நியூயார்க், ஜூலை 30

இந்துசமுத்திரத்தை அமைதிப் பிராந்தியமாக்கும் யோசனையை அமெரிக்காவுடன் பிரிட்டனும் பிரான்ஸும் நிராகரித்து விட்டன

இந்துசமுத்திரம் சம்பந்தமான ஐ. நா. இடைக்காலக் கமிட்டியைக் கலைத்து விடும்படியும் அமெரிக்கா கோரியிருக்கிறது.

அடுத்த ஆண்டில் இலங்கையில் நடைபெறும் இந்துசமுத்திர அமைதி மாநாட்டைப் பகிஷ்கரிக்கப்போவதாக இம்மூன்று நாடுகளும் அறிவித்து விட்டன. (எ)

# தபாலகம் செல்வோரின் தலைமேல் விழும் நிலைமையில் கட்டடங்கள்

### திருத்துவது குறித்து சொந்தக்காரரும் திணைக்களமும் இழுபறி

பண்டத்தரிப்பு, ஜூலை 31

பண்டத்தரிப்பு தபால் நிலையத்துக்குச் செல்லும் மக்கள் மழை, வெயில் பாதிப்பைத் தாங்கும் சகிப்புணர்வு உள்ளவர்களாக இருக்க வேண்டும். அதுமட்டுமல்ல எந்நேரமும் இடிந்து விழும் நிலையில் உள்ள வாசல் பக்கச் சிமெந்துக்கூரை ("கூட்") பற்றிய அச்ச உணர்வு இல்லாதவர்களாகவும் இருக்க வேண்டும்.

இது போன்ற உணர்வுச் சோதனைகளுக்கு வட்டுக்கோட்டை, அச்சுவேலி தபால் நிலையத்துக்குச் செல்வோரும் ஆளாக வேண்டியுள்ளது.

அந்த அளவுக்கு யாழ் மாவட்டத்தில் உள்ள பல தபால் நிலையங்களின் கட்டடங்கள் சீரற்றுக் கிடக்கின்றன.

தபால் நிலையத்துக்கென கட்டடங்கள் இல்லாத இடங்களில் தனியார் வீடுகள் ஒப்பந்த அடிப்படையில் தபால் நிலையமாக பாவிக்கப்படுவது தெரிந்ததே.

இப்படியான நிலையங்களே சேதத்துக்குள்ளாகி திருத்தப்படாமல் உள்ளன.

இது சம்பந்தப்பட்ட பல பகுதியாரினதும் அணுகுமுறையை அறிய முயன்ற போது அவை தெரிவித்தவை பெரும் சிக்கல் நிலையை உருவாக்குகின்றன.

இது பற்றி தபாலதிபர் ஒருவரைக் கேட்ட போது அவர் சொன்னார்:-

"கட்டடச் சொந்தக்காரருக்கு கடன் வசதி செய்து தருவதாகவும், அதை நாம் கொடுக்கும் வாடகையில் இருந்து கழித்துக் கொள்ளலாம் என்றும் கடிதம் எழுதியிருந்தோம் அதற்கு அவர்களிடம் இருந்து எதுவித பதிலும் இல்லை.

அவர்கள் கட்டடத்தை திருத்த மறுத்தால், திருத்த வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் முடித்து திருத்தச் செலவுடன் 15 சத வீத தொகையும் சேர்த்து மாதாந்த வாடகையில் இருந்துகழிக்கப்படும்.";

தபால் நிலையம் அமைந்திருக்கும் வீட்டு உரிமையாளர் தமது நிலைப்பாட்டை பின்வருமாறு விளக்கினார்

"திணைக்களப் பாவனையில் உள்ள போது கட்டடம் பாதிக்கப்பட்டது. பாவனைக்கென வாடகைக்கு எடுத்தவர்கள் அதே போல் திரும்பவும் ஒப்படைப்பது தான் நியதி முறை, அவர்கள் உடைவுகளைச் செப்பனிட வேண்டும்;

தபாலதிபர் தெரிவித்த, திருத்தச் செலவுடன் 15 சத வீதம் சேர்த்து வாடகையில இருந்து கழிக்கும் திட்டம் பற்றி கட்டட உரிமையாளரிடம் கேட்டதற்கு அவர் பின்வருமாறு சொன்னார்:-

"இருவர் சேர்ந்து செய்த ஒப்பந்த நிபந்தனைகளுக்கு மேலாக எந்தக் கட்சியும் எதையும் திணிக்க முடியாது, அது சட்டபூர்வமான செயலுமல்ல.

மேலும் திணைக்களத்திடம் இருந்தும் ஒருசிறு தொகையையே வாடகையாகப் பெறுகின்றோம்.

இதை மக்கள் சேவைக்காகவே வாடகைக்குக் கொடுத்திருக்கின்றோம்.

நியாமற்ற பணிப்பை எம் மீது திணிக்கும் கடிதம் அனுப்பப்பட்டிருப்பது சட்ட விரோதம்.

இப்படியான செயல் மூலம், அரச திணைக்களங்களுக்கு பொது மக்கள் தமது கட்டடங்களை வாடகைக்கு கொடுக்கக் கூடாது என்ற நிலையே உருவாகிறது.

இவர்களின் கருத்து முரண்பாடு, நடவடிக்கைச் சிக்கல் என்பனவற்றுக்குள் சிக்கித் தவிப்பவர்கள் பாவம் பொது மக்களே! அவர்களுக்கு இந்த ஆபத்து எப்படி விளங்கப் போகிறது? (இ-த-120)

## சுபீட்சமான பாதையில் செல்ல ஒத்துழைக்க வேண்டும்

### ஈ. பி. ஆர். எல். எப். அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 31

இன்றைய இக்கட்டான நிலையில் எம்மக்களின் பாதுகாப்பையும், அவர்களின் எதிர்கால நலன்களையும் கருத்திற்கொண்டு ஒவ்வொரு இளைஞனும் தமது தாயக பூமியையும், மக்களையும் எல்லாவற்றுக்கும் மேலாக இளைஞர்களின் தியாகத்தால் இதுவரை பெற்ற வெற்றிகளையும் பாதுகாக்க முன்வர வேண்டும்.

பல கஷ்டங்கள் மத்தியிலும் நாம் முன்னெடுத்த போராட்டத்தை முடிவாக்கி, அமைதியும் சமாதானமும் நிறைந்த சுபீட்சமான பாதையை நோக்கி முன்சென்று வளமான எதிர்காலத்தை சிருஷ்டிப்பதற்கு ஒவ்வொரு பெற்றோரும் எம்முடன் ஒத்துழைக்க வேண்டுமென அன்புடன் வேண்டுகின்றோம்.

பெற்றோர்களுக்கும், இளைஞர்களுக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.) விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஈழ விடுதலைப் போராட்டம் பல்வேறு திருப்புமுனைகளினூடாக இன்று மீண்டும் ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் முப்படைகளின் தாக்குதல்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்கள்.

*லிபரேசன் ஒப்பரேசன்* நடவடிக்கையை மூர்க்கத்தனமான முறையில் வடமாராட்சியில் அரசு மேற்கொள்வதற்கு வழி வகுத்தவர்களே, தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பை உத்தரவாதம் செய்யவும், அழிந்து போன தேசத்தைப் புனர் நிர்மாணம் செய்யவும் எமது நாட்டினுள் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினூடாக வந்த இந்திய அமைதிப்படையினரோடு யுத்தத்தைத் தொடர்ந்ததன் மூலம் தமிழ் பேசும் மக்களின் துயரங்களுக்கு காரணகர்த்தாக்களாயினர்.

இந்திய அமைதிப்படையை தாக்கிய அதே சமயத்தில் ஜனநாயக நீரோட்டத்துக்கு வந்த இயக்கங்களை அழித்தொழிக்க முற்பட்டு இன்று ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் செல்லப் பிள்ளைகளாக மாறியுள்ளனர்.

சந்தர்ப்ப, சூழ்நிலைகளை சரியாகக் கணக்கிட்ட இலங்கை அரசு இக் குழுவினரை தமது கையாட்களாகப் பாவிப்பதில் வெற்றி கண்டது.

இன்று மீண்டும் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியமான தாயக பூமியை சுட்டெரிக்கும் அபாயத்திலும் எமது மக்களை மீண்டும் அகதிகளாக ஒதுங்க. இடமின்றி நிர்க்கதியாக அலையவேண்டிய ஆபத்தான சூழ்நிலையிலும் வாழ்கின்றோம் என்பதை கவனத்தில் கொள்வது அவசியமாகின்றது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட இலங்கை மருத்துவக்கல்லூரியை

# கிழக்கு பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடமாக்க வேண்டும்

### கல்லூரியின் நிர்வாக சபை அறிக்கை

யாழ்ப்பாணம் ஜூலை 31

"வட இலங்கை மருத்துவக் கல்லூரியை தேசிய மயமாக்கி கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடமாக மாற்றியமைக்கும் பட்சத்தில் தமிழ் பேசும் மாணவர்களுக்கு இரண்டாவது மருத்துவப் பீடம் உதயமாகும் வாய்ப்புக் கிட்டும்"

மேற்படி கல்லூரியின் நிர்வாகசபை பத்திரிகைகளுக்கு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு கூறுகின்றது.

'வட இலங்கை மருத்துவக் கல்லூரியைத் தேசியமயமாக்குவதற்குரிய ஆக்கபூர்வமான செயற்பாடுகளை இலங்கை அரசுடன் இக்கல்லூரி நிர்வாகம் மேற்கொண்டுள்ளது'' என அறிக்கை மேலும் கூறுகின்றது.

'இலங்கை அரசு கல்லூரியைத் தேசியமயமாக்கும் வரை இடைக்கால நிலையாக ஒருசில காலத்துக்கு இயங்கி தேசியமயமாக்கலுக்கு ஆவன செய்யப்படும். தேசியமயமாக்கம் நிறைவேறிய பின் நிர்வாகம், பரீட்சைகள் யாவும் கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்துக்குக் கீழே கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது' என்று வட இலங்கை மருத்துவக் கல்லூரி நிர்வாக சபையின் அறிக்கை கூறுகின்றது. (க)

## நல்லூர் திருவிழா சாரணர் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 31

28 வருடங்களாக நல்லூர்த் திருவிழாவின் போது நடைபெற்று வரும் சாரணர் சேவை இம்முறையும் நடைபெறவுள்ளது.

சாரண சேவையில் ஈடுபட விரும்பும் திரிசாரணர்களும் சிரேஷ்ட சாரணர்களும் தங்கள் பெயர்களை சமூக சேவை உதவி மாவட்ட ஆணையாளர் எஸ் ஏகாம்பரநாதனுக்கு ஆவணிமாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்குமாறு மாவட்ட ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திரிசாரணர்களை தமது திரிசாரண உபமாவட்ட ஆணையாளர் மூலமாகவும், சிரேஷ்ட சாரணர்களை தத்தம் அதிபர்கள் மூலமாகவும் அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (க- 6)

இலங்கையில்

## சமாதானம் நிலவவேண்டி சுவிஸ் திருயாத்திரை விழா

சாவகச்சேரி, ஜூலை 31

இலங்கையில் சமாதானம் நிலவ வேண்டும் என வேண்டி சுவிற்சர்லாந்தில் திருயாத்திரை விழா ஒன்று நடத்துவதற்கு ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன

அயின் சீடலின் என்னும் இடத்திலேயே இந்த திருயாத்திரை விழா நடைபெற உள்ளது.

இவ்விழாவில் பாடற் திருப்பலியும் மாதாவின் திருப்பவனி நிகழ்ச்சிகளும் தமிழ்மொழியில் நடைபெறும். அயின்சீடலின் கத்தோலிக்கத் திருயாத்திரை ஆலயத்தில் அடுத்த மாதம் 6ஆம் திகதி இவ்விழா நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஒ-31)

## வாசகர் திருமுகம்

### உணவு முத்திரை

சமீபத்தில் புதிதாக ரயில்வே பகுதிக்கு வேலைக்கு எடுக்கப்பட்டவர்களின் உண முத்திரையை அரசு திரும்பவும் எடுத்துள்ளது.

ஆனால் சம்பந்தப்பட்ட தொழிலாளரின் உணவு முத்திரையை எடுத்தால் பரவாயில்லை. அவர்களின் குடும்பத்தில் உள்ள அனைவரினதும் முத்திரையை எடுத்தால் அவர்களின் நிலை என்ன?

ஒருவர் தொழில் செய்து குடும்பத்தில் உள்ள சுமார் பத்துப்பேர் சாப்பிட முடியுமா?

தொழில் செய்யும் ஒருவர் பெறும் சம்பளம் 1000 ரூபா அவருடைய சாப்பாட்டிற்கே போதாது.

ஆகவே தொழில் செய்பவருடைய முத்திரையைப் பெற்றுக் கொண்டு அவரின் குடும்பத்தில் ஏனைய அங்கத்தவர்களின் முத்திரையை மீண்டும் வழங்க உயர் அதிகாரிகள் ஆவன செய்வார்களா?

பி. மதுரபிள்ளை,
வடபகுதி பொறுப்பதிகாரி,
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்.

### யாருக்கு அனுப்புவது?

இருபத்தையாயிரம் ஆசிரிய பயிலுநர் பதவிக்கான விண்ணப்பதிகதி முடிவடைவதற்கு இன்னும் சில நாட்கள் தான் இருக்கின்றன. இந்த நிலையில் விண்ணப்பப் படிவத்தை யாருக்கு அனுப்ப வேண்டும் என பதில் வர்த்தமானிப் பத்திரிகைக்கும் புதினப் பத்திரிகைக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகிறது இதனால் பெரும்பாலான விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவத்தை அனுப்ப முடியாத நிலையில் இருக்கின்றார்கள்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விளக்கம் கொடுப்பார்களா?

அ. குருநாதன்,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேல்படை மருந்து

இப்படை மருந்து தேமல், கக்கூஸ்பற்று, சொறி, சிரங்கு, கரப்பன், பூச்சிக்கடி, முதலிய சகல ரணங்களையும் குணமாக்கும்.

1 பெரிய டப்பி 12/-
1 சின்ன டப்பி 6/50

கிடைக்குமிடம்:
க. செ. கைலாசம்பிள்ளை & சன்ஸ்
மருந்துக்கடை
(5) 76, பெரியகடை, யாழ்ப்பாணம்:



# உதயன்

31 07 1989 திங்கட்கிழமை



## இயங்கம்வேர் தைலம்

இத்தைலம் தேகத்தில் உண்டாகும் சகல விதமான சொறி, கரப்பன், சிரங்கு, புண், கடி, குஸ்டம், கிரந்தி, குளை வண்டுகடி, சில விசம் முதலிய வியாதிகளுக்குப் பூசிவரக் குணமாகும்.

2 அவு. போத்தல் விலை 10/-

கிடைக்குமிடம்:
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
மருந்துக்கடை
76, பெரியகடை, யாழ்ப்பாணம்:



## ஜேர்மன் பிரயாண ஒழுங்கு உடன் செய்து கொடுக்கப்படும்

1. 16 வயதிற்குட்பட்டோரை (STUDENT) மாணவராக அனுப்பி வைக்கப்படும்.
2, வயது கூடியவர்கள் அதாவது 16 வயதிற்கு மேற்பட்டோருக்கும் பிரயாண ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

இவர்களது பிரயாணச் செலவின் ஒருபகுதியை செலுத்தி மிகுதியை ஜேர்மனியிலுள்ள பிரயாணியின் உறவினர்களால் எமது ஜேர்மன் முகவரிடம் செலுத்தப்பட்டதும் உடன் பிரயாண ஒழுங்குகள் செய்யப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**M. பாலசுந்தரன்**
இல: 413, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[ஆனைப்பந்திச் சந்தியடியில் (11651)


## 45 ஆம் நாள் நினைவின் நீட்டோலை



### செல்வன் தியாகராஜா கஜேந்திரன் (இந்திரன்)

(பரியோவான் கல்லூரிப் பாலகன்)

தூல முகிழ்ப்பு: 12 - 04 - 1972
தூல அவிழ்ப்பு: 17 - 06 - 1989

இந்திரா!
எங்கள் செல்வச் செழுஞ்சுடரே!
பிள்ளைக் கலி தீர்க்கப் பிறந்தவனே!
இதயம் வெடிக்க எங்கே சென்றாய்
படிக்கும் வயதில் துடிக்கும் சாவா]
பாதகம் அனைத்தும் சாதகம் ஆனதா?
படைத்தவன் எங்கே பராக்குப் பார்த்தான்
பாலகாண்டத்தில் இருண்ட காலமா?
இருண்ட காலத்தில பாலகன் மரணமா?
இந்திர மகனே! இந்திர மகனே!
பெற்ற வயிறும் சுமந்த தோளும்
இரத்தத் தொடர்பு உறவும் சூழலும்
பரியோவான் கல்லூரிப் பாசப்பிணைப்பும்
பதைக்கப் பதைக்கப் பயணமானாயே]
இறுதிப் பயணமா? திரும்பும் பயணமா?
இகலோகத்தில் இன்னொரு மகனாய்
இனிவருவாயே இனி வருவாயே

பெற்றோர், சகோதரர்கள்,
பேரன்மார், பேர்த்திமாரும்,

திலகா ஸ்ரோர்ஸ்,
46, பஜார் வீதி,
வவுனியா.

(11660)

151/8, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

அமைதிப்படைவிலகல்:

## சென்னையில் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூலை 31

இலங்கையில் இருந்து உடனடியாக அமைதிப்படையை விலக்கும்படி கோரி தமிழர் தேசியக் கழகம், ஜனதா தள், தமிழக முன்னேற்ற முன்னணி ஆகியன சென்னையில் கடந்த சனிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தின.

திரு. ப. நெடுமாறன், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி ஆகியோர் ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை வகித்தனர். (உ-எ)

## ★ தென்பகுதி சம்பவங்கள்

கொழும்பு, ஜூலை 31

தென்பகுதியில் நேற்று இடம்பெற்ற சம்பவங்கள் பற்றிய விவரம் வருமாறு: —

### 5 சிப்பாய்களும் சாரதியும் பலி

★ அதிகாலை பிலியந்தலைக்கு அருகில் சட்டுவால என்ற இடத்தில் ரோந்து சென்ற இராணுவ வாகனம் மீது தீவிரவாதிகள் மறைந்து இருந்து தாக்குதல் நடத்தினர்: அதில் 5 இராணுவத்தினரும் வாகன சாரதியும் உயிரிழந்தனர்.

★ கொழும்பிலிருந்து நுவரெலியா நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவக் கோஷ்டியை கேகாலைக்கு அருகில் அம்பன்பிட்டிய என்ற இடத்தில் வைத்து தீவிரவாதிகள் மறைந்து இருந்து தாக்கினர்: அப்போது ஒரு இராணுவ வீரர் காயமடைந்தார்.

★ கப்புறுபிட்டியாவில் இராணுவ வாகனம் ஒன்றின் மீது நேற்றுக் காலை நிலக்கண்ணி ஒன்றைத் தீவிரவாதிகள் வெடிக்கவைத்தனர் நேரம் தப்பி வெடித்ததால் இராணுவ வாகனத்திற்கு சேதம் ஏதும் ஏற்படவில்லை.

★ கம்புறுபிட்டிய நகர கடைத்தெருவில் குண்டு ஒன்று வெடிக்க வைக்கப்பட்டது. அதனால் பல கடைகள் சேதமடைந்தன.

இதனையடுத்து பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடத்தினர் அப்போது மதகு ஒன்றின் அருகே இரண்டு தரைக்கண்ணி வெடிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை ஒவ்வொன்றும் 20 கிலோ எடையுடையவை என்று சொல்லப்பட்டது. (ஒ-எ)

## அதிகாரம் வழங்கப்பட்ட.-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமையும்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ள விடயங்களை முழுமையாக நிறைவேற்றுவதில் இந்தியாவுக்கு இருக்கக்கூடிய கடமைப்பாடுகளை அது நிறைவேற்றி தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைகளைப்பூர்த்தி செய்யும் என எமக்கு வழங்கப்பட்ட உறுதிமொழியின் அடிப்படையிலேயே நாம் இந்த ஒப்பந்தத்தை ஆதரித்தோம்

இரண்டு வருடங்களாகியும் ஸ்ரீலங்கா அரசு எந்தவித அதிகார பரவலாக்கலையும் இதுவரை மேற்கொள்ளவில்லை. இந்தியாவும் இந்தியாவின் அமைதிப்படையும் எமது மக்களுக்கு துணையாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிலை கொண்டு இருக்கையிலேயே அதிகாரபரவலாக்கலை தட்டிக்கழித்து வந்திருக்கும் ஸ்ரீலங்கா அரசு அமைதிப்படை வெளியேற ஆரம்பித்த பின் அதிகாரப்பரவலாக்கலை நிறைவேற்றுமென எதிர்பார்க்கவே முடியாது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு ஏற்ப வடக்குகிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தமது விவகாரங்களை தாமே கவனித்துக் கொள்ளக்கூடியவாறு தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட்ட பின்னர் மட்டுமே இந்திய அமைதிப்படை வெளியேறுவதை ஆசரிக்கவோ அனுமதிக்கவோ முடியும்.

இவற்றிற்கு மாறான எந்த ஏற்பாடும் தமிழ் பேசும் மக்களின் நலன்களுக்குபாதகமாக முடியும். அத்தகைய நிலைஏற்படின் எமது மக்களின் உயிர் உரிமை, பாதுகாப்பு மற்றும் நலன்கள் கருதி சில தவிர்க்க முடியாத முடிவுகளை மேற்கொள்வதற்கு நாம் நிற்பந்திக்கப்படுவோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

## தெற்கில் ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடபகுதியில் இருந்து சென்ற ஒரு சில வாகனங்கள் மட்டுமே இவ்வழியூடாக போக்குவரத்தில் ஈடுபட்டன.

அனுராதபுரத்தில் இலங்கை இராணுவத்தினர் ஒரு சிலபஸ்களை செலுத்தினர்.

அனுராதபுரம், கண்டி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் நேற்று ஆயுதப்படையினர் 7 தீவிரவாத சந்தேக நபர்களை சுட்டுக்கொன்றனர். (ஒ-9)

## ரஞ்சன்,பந்த் ..:

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் பந்துடன் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் நரேஷ் சந்திரா, கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் எல். எல். மெஹ்ரோத்திரா ஆகியோரும்—

இலங்கைக் குழுவில் அமைச்சர் விஜேரத்தினவுடன் அமைச்சர் ஹமீது, ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிராட்மன் வீரக்கூன், வெளியுறவுச் செயலாளர் பெர்னாட் திலகரத்தின முன்னாள்செயலாளர் டபிள்யு. ரி. ஜெயசிங்கா, புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் டாக்டர் கலபகே ஆகியோர் இடம்பெற்றனர். (ஒ-ர)

## இருதரப்பு --

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல் பற்றிய கால அட்டவணையைத் தயாரிப்பது, வடக்கு-கிழக்கு மாகாண மக்களுக்குத் தேவையான பந்தோபஸ்து-பாதுகாப்பு ஆகியவற்றை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன? —என்பன பற்றியதாக அமைந்தன என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று (திங்கள்) நடைபெறும் பேச்சுக்களின் போதே இவ்விஷயங்கள் குறித்து தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய பேச்சுக்களில் எடுக்கப்படும் முடிவுகள் இருதரப்பு உறவில் திருப்புமுனை ஒன்றை ஏற்படுத்துவதாக அமையும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

## மட்டு. பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 31

மட்டக்களப்புக்கான இலங்கை போக்குவரத்துச் சேவையின் இரு பஸ்கள் யாழ்நகரில் இருந்து இன்றுகாலை 6 மணிக்கு புறப்படுகின்றன.

நாளை சேவை நடைபெறுமா என்பது பற்றி முடிவு செய்யப்படவில்லை. (ஒ-3)

## இளைஞர்கள் விடுதலை

யாழ்ப்பாணம், ஜூலை 31

கடந்த 26 ஆம் திகதி பருத்தித்துறையில் இராணுவத்தினரால் விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்ட இளைஞர்கள் நேற்று முன் தினமும் நேற்றும் விடுதலை செய்யப்பட்டனர். (ஒ-160)

## காலமானார்

திருவள்ளுவரின் உருவப் படத்தை வரைந்து தமிழ் நாடு அரசின் பரிசு பெற்ற பிரபல ஓவியர் வேணுகோபால சர்மா நேற்று சென்னையில் 82 ஆவது வயதில் காலமானார். (ஒ-எ)

## அனுதாபத்திற்கும் மரியாதைக்கும் நன்றி

எங்கள் புதல்வன் தியாகராஜா கஜேந்திரனின் அகால மரணத்தைக் கேள்வியுற்றதும் ஓடோடி வந்து அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், அயலவருக்கும் பரியோவான் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவருக்கும் - அவர்கள் கஜேந்திரனின் பூதவுடலுக்குப் பூமாலை போட்டும், மலர்வளையம் வைத்தும் மரியாதை செய்தமைக்கும், வவுனியாவிலிருந்து வந்து அனுதாபம் தெரிவித்த நண்பர்களுக்கும் வெளிநாடுகளிலிருந்து அனுதாபச் செய்திகளை அனுப்பிய உருத்துடையோருக்கும் எங்கள் நன்றியை வணக்கத்தோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

த. தியாகராஜாவும் மனைவியும்
(பெற்றோர்)

'திலகா ஸ்ரோர்ஸ்'
46, பஜார் வீதி,
வவுனியா.

154/8 ஆத்திசூடி வீதி.
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(11659)

## மரண அறிவித்தல்கள்

### பர்ஞந்து சுவாம்பிள்ளை (நவம்)

முன்னைநாள் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பர்ஞந்து சுவாம்பிள்ளை (நவம்) காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி பர்ஞந்து (செக்கர்) ஆகியோரின் அன்பு மகனும், சண்முகேஸ்வரியின் அன்புக் கணவரும், முத்துராஜா, சூசைப்பிள்ளை, (தபாற்கந்தோர், கற்பிட்டி), யோக்கின்பிள்ளை, சீமாம்பிள்ளை (நீர்ப்பாசன திணைக்களம், வவுனிக்குளம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 4 மணியளவில் நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ச. சண்முகேஸ்வரி

மிருசுவில்:

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கரத்தினம் கந்தையா

(இளைப்பாறிய ஆசிரியை)

திருமதி தங்கரத்தினம் கந்தையா (இளைப்பாறிய ஆசிரியை) இயற்கையெய்தினார்.

அவர் M. S. கந்தையா தொல்புரம் அவர்களின் அன்பு மனைவியும், மகேந்திரராசா (முன்னாள் கல்வித் திணைக்கள லிகிதர், செட்டியார் மடம்.) குணேந்திரராசன் (Forut), தனேந்திரராசன் (Germany), இந்திராணி (ஆயுள்வேத வைத்தியர், கந்தர்மடம்), பஞ்சேந்திரதாசன் (M Sc: முன்னாள் பேராதனை, மட்டக்களப்பு பல்கலைக்கழக கணித விரிவுரையாளர்), சர்வலோகநாயகி (France) ஆகியோரின் அன்புத் தாயாரும், இந்திராதேவி, செல்லமணி, சந்திரவதனு (Germany), Dr. தவயோகநாதன் (நிந்தாவூர்), சுலோசனா (ஆசிரியை, பாக்கியமகாவித்தியாலயம், மாத்தளை) ஜெயமார் (France) ஆகியோரின் அன்பு மாமியும், சுரேஸ்வரன், சதீஸ்வரன், பாமினி, தர்மினி, சர்மினி, சர்மிளன், சுமனேந்திரன், சஜிதரன், ஹரிணி, நந்தினி, ஜெநாத், உத்தரன், ஜெநாத்தி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரிகைகள் 31. 07. 1989 திங்கள் கிழமை இன்று காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் 218/3, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் நடைபெற்று தகனக் கிரிகைக்காகப் பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் தருபவர்:
க. குணேந்திரராசன்

(11658)

### திரு. ஆறுமுகம் கிட்டிணபிள்ளை

(இளைப்பாறிய கணக்காளர்)

தென்புலோலியூர், நீர்ப்பாசன இலாகாவிலும், மகாவலி கங்கை திசை திருப்புத் திட்டத்திலும் பிரதம கணக்காளராகக் கடமையாற்றிய திரு. ஆறுமுகம் கிட்டிணபிள்ளை 29-07-1989 இல் காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், மனோகரன் (பொறியியலாளர், லண்டன்), மணிவாசகர், மாணிக்கவாசகர், மங்களமணி (அவுஸ்திரேலியா), மனமோகன் (லண்டன்) ஆகியோரின் தந்தையும், இலக்குமி [லண்டன்], தனலக்குமி, கணபதிப்பிள்ளை [விரிவுரையாளர், அவுஸ்திரேலியா], இன்பராணி [அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், யாழ்ப்பாணம்] ஆகியோரின் மாமனாரும், விமலன், நளினு, தட்சாஷயினி, சுகன்யா, விஜயன், கிருபன் ஆகியோரின் பேரனும், காலம் சென்ற சிதம்பரப்பிள்ளையின் அன்புச் சகோதரரும், இராசமாணிக்கம் [இளைப்பாறிய மலேரியா நோய்த் தடுப்பு அதிகாரி, முத்தையன்கட்டு], காலம் சென்ற பாக்கியம், சரஸ்வதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30-07-89 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றதென்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
கி. மாணிக்கவாசகர்.

தென்புலோலி,

(1412)

### திருமதி மாசிலாமணி பாக்கியமலர்

நல்லூர் வடக்கைச் சேர்ந்த திருமதி மாசிலாமணி பாக்கியமலர் 30 - 07 - 1989 இல் காலமாகிவிட்டார் அன்னார் திரு. சி. மாசிலாமணி (உரிமையாளர் மாசிலாமணி ஆபரண மாளிகை, கனுதிட்டி) பிரிய மனைவியும், மங்களேஸ்வரன், மங்களேஸ்வரி, தயாவதி, காலஞ்சென்ற தயாளன், கௌசல்யா, சுதர்சன் ஆகியோரின் அன்பு தாயுமாவர், இவர் திரு - திருமதி இரத்தினத்தின் அன்புச் சிரேஷ்ட மகளுமாவார். அன்னாரின் அந்திமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மாசிலாமணி

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு:

(11656)

### சுவாமிநாதர் மாணிக்கவாசகர்

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த இளைப்பாறிய P. W. D. ஓவசியர் சுவாமிநாதர் மாணிக்கவாசகர் 29-7-89 சனிக்கிழமை கொல்லங்கலட்டியில் காலமானார். அன்னார் தெல்லிப்பழை காலஞ்சென்ற சுவாமிநாதர் - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வரும், தங்கமுத்துவின் அன்புக் கணவரும், கப்ரின் சுவாமிநாதன் (சிங்கப்பூர்), இந்திரநாதன் (சூடான்), மண்டலநாயகம் (தபெனின்கலா குறூப், நாவற்குழி), மணிமேகலை, றஞ்சினி, றதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவலிங்கம் (சிங்கர், கொழும்பு), சிவஞானம் (சட்டத்தரணி, சுன்னாகம்), நிர்மலாதேவி (சிங்கப்பூர்), இந்திரகுமாரி (இலங்கை வங்கி, காங்கேசன்துறை), பொன்னம்பலம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரகாஷ், பிரதீஸ், விக்கினேஸ்வரன், நிர்மலேஸ்வரன், சிந்துஜா, பிரசன்னா, நிரோசன்னா, அபிவர்சினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (31-7-89) திங்கள் நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி த. மாணிக்கவாசகர்

கொக்கன்,
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

(1413)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 31 - 07 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org